தமிழ் முரசு



தரமணி பறக்கும் ரயில் நிலைய வளாகத்தில் கருவேல மரங்கள் மற்றும் குப்பை கழிவுகள் குவிந்து வைக்கப்பட்டுள்ளது.

### தஞ்சை, திருச்சியில் ஜல்லிக்கட்டு

# 1,300 காளைகள் ஆவேச பாய்ச்சல்

## 625 வீரர்கள் மல்லுக்கட்டு

**தஞ்சை, ஜன. 28–**

தஞ்சை திருக்கானூர் பட்டி, திருச்சி கருங்குளத்தில் இன்று நடந்த ஜல்லிக்கட்டில் 1,300 காளைகள் சீறி பாய்ந்தன. காளைகளை 625 வீரர்கள் போட்டி போட்டு அடக்கினர்.

தஞ்சை அடுத்த திருக்கானூர்பட்டியில் புனித அந்தோணியார் பொங்கலை விழாவையொட்டி ஜல்லிக்கட்டு போட்டி இன்று நடந்தது. இதற்காக தஞ்சை, புதுக்கோட்டை, மதுரை, திருச்சி, பெரம்பலூர், அரியலூர், ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 700 காளைகள் அழைத்து வரப்பட்டன. 350 வீரர்கள் களமிறங்கினர்.

காலை 6.30 மணிக்கு ஜல்லிக்கட்டு போட்டியை கலெக்டர் தீபக் ஜேக்கப் கொடியசைத்து துவக்கி வைத்தார். முதலாவதாக வாடிவாசலில் இருந்து கோயில் காளை அவிழ்த்து விடப்பட்டது. இதைதொடர்ந்து ஒவ்வொரு காளையாக அவிழ்த்து விடப்பட்டன. காளைகளை வீரர்கள் போட்டி போட்டு அடக்கினர். களத்தில் பல காளைகள் வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக நின்று விளையாடியது. காயமடைந்த வீரர்களுக்கு களத்திலேயே முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

காளைகளை அடக்கிய வீரர்கள் மற்றும் பிடிபடாத காளைகளின் உரிமையாளர்களுக்கு சைக்கிள், வாஷிங் மிஷின், பிரிட்ஜ், கட்டில், மிக்சி, எவர்சில்வர் பாத்திரம், ரொக்கத்தொகை உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன. ஏடிஎஸ்பி ஜெயச்சந்திரன் தலைமையில் வல்லம் டிஎஸ்பி நித்யா மற்றும் 700 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். ஏராளமானோர் ஜல்லிக்கட்டை கண்டு ரசித்தனர்.

அதேபோல் திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்தவையம்பட்டி அருகே உள்ள கருங்குளத்தில் ஜல்லிக்கட்டு இன்று நடந்தது. திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 600 காளைகள் கொண்டு வரப்பட்டன. 275 மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர். காலை 9 மணிக்கு ஜல்லிக்கட்டை ஸ்ரீரங்கம் ஆர்டிஓ தட்சணாமூர்த்தி துவக்கி வைத்தார். இங்கு ரொக்க பணம், வெள்ளி காசு, கட்டில், மின் விசிறி, குக்கர், சேர், எவர்சில்வர் பாத்திரம் உள்ளிட்ட பல்வேறு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. மணப்பாறை டிஎஸ்பி ராமநாதன் தலைமையில் 280 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



தஞ்சை மாவட்டம் திருக்கானூர்பட்டியில் இன்று நடந்த ஜல்லிக்கட்டில் வாடிவாசலில் இருந்து சீறிப்பாய்ந்த காளையை தாவிப்பாய்ந்து வீரர் அடக்கினார்.

**நாமக்கல்**

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் தாலுகா அமணி கிராமத்தில் ஜல்லிக்கட்டு பேரவை சார்பில் 7ம் ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டி இன்று காலை நடந்தது. இந்த போட்டியில் தமிழகம் முழுவதும் இருந்து 700 காளைகள் பங்கேற்றன. 500 மாடுபிடி வீரர்கள் கலந்து கொண்டனர். வாடிவாசல் வழியாக சீறிப்பாய்ந்து வந்த காளைகளுடன் வீரர்கள் மல்லுக்கட்டி அடக்கினர். இதில் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு கட்டில், பீரோ, அண்டா, சைக்கிள், தங்க மோதிரம், கிரைண்டர், மிக்சி, வேட்டி உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டது.

# நாகை வரும் ஆளுநருக்கு எதிராக கருப்புக் கொடி போராட்டம்

## மார்க்சிஸ்ட் கட்சி அறிவிப்பு

**நாகை, ஜன. 28–**

நாகை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி இன்று காலை விமானம் மூலம் திருச்சி வந்தார். விமான நிலையத்தில் அவரை கலெக்டர் பிரதீப் குமார் மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். பின்னர் அவர் கார் மூலம் திருவாரூர் சென்றார். அங்குள்ள அரசு விருந்தினர் மாளிகையில் சிறிது நேரம் ஓய்வு எடுத்த அவர் மதிய உணவினை முடித்துக்கொண்டு நாகை மாவட்டம் கீழ்வேளூர் அடுத்த கீழ்வெண்மணி செல்கிறார். அங்கு கீழ்வெண்மணி தியாகி பழனிவேலை சந்திக்கிறார்.

இதனையடுத்து நாகை பொரவச்சேரி ஆண்டவர் நர்சிங் கல்லூரி பின்புறம் தமிழ் சேவா சங்கம் நடத்தும் தமிழர் திருவிழா மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு வீடுகள் வழங்கி, மீனவர் மேம்பாட்டுத் திட்டங்களை கவர்னர் தொடங்கி வைக்கிறார். இந்த விழாவை முடித்துக் கொண்டு அவர் காரைக்குடிக்கு காரில் புறப்பட்டு செல்கிறார்.

கடந்த 1968ம் ஆண்டு கீழ்வெண்மணி கிராமத்தில் கூலி உயர்வு கேட்டு போராடிய விவசாய கூலித்தொழிலாளர்கள் 44 பேர் ஒரே குடிசையில் அடைத்து உயிருடன் தீ வைத்து எரித்துக்கொல்லப்பட்டனர். இதனை கண்டித்து நடந்த போராட்டத்தின் போது நடந்த துப்பாக்கி சூட்டில் அதே கிராமத்தை சேர்ந்த பழனிவேல் குண்டடி பட்டு உயிர் தப்பினார். இவரைதான் ஆளுநர் சந்திக்க உள்ளார்.



பழனிவேல்

ஆனால் ஆளுநரை சந்திக்க தனக்கு விருப்பம் இல்லை என்று பழனிவேல் கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறும்போது, வர்க்க போராட்டத்தில் நிலசுவான்தார்களுக்கு எதிராக போராடிய மார்க்சிஸ்ட் தொண்டர்களில் நானும் ஒருவன். அந்த போராட்டத்தின்போது ஆதிக்க சக்திகளால் குண்டடிபட்டு காயமுற்று பாதிக்கப்பட்டேன். அப்போது எல்லாம் வந்து சந்திக்காதவர்கள் தற்போது அரசியல் ஆதாயத்திற்காக சந்திக்க வருகிறார்கள். அவரை சந்திப்பதில் எனக்கு துளியளவும் விருப்பமில்லை என்று கூறினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் வி.மாரிமுத்து கூறியதாவது: தமிழ்நாடு அரசாங்கம் அனுப்பி வைத்துள்ள 20–க்கும் மேற்பட்ட மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், நாடாளுமன்றத் தேர்தலுக்காக பாஜ செய்ய வேண்டிய வேலைகளின் ஒரு பகுதியை ஆளுநர் ஆர்.என்.ரவி செய்து வருகிறார். இந்துத்துவ சக்திகளின் பிரதிநிதியான ஆளுநர் ரவி, வெண்மணி வருவதும், தோழர் கோ.பழனிவேலைச் சந்திக்கப் போவதாக கூறுவதும் வன்மையான கண்டனத்திற்கு உரியது. தமிழ் சேவா சங்கம் என்கிற பெயரில் ஆர்எஸ்எஸ் வேலைகளைச் செய்து வரும் ஆளுநருக்கு, கீழ வெண்மணி செல்ல முயன்றால் உழைக்கும் மக்களை ஒன்று திரட்டி கருப்புக் கொடி காட்டுவோம் என்றார்.

இதனால் திருச்சி, திருவாரூரில் ஆளுநர் செல்லும் வழிகள் மற்றும் கீழவெண்மணி பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

### போதையேறி போச்சு... புத்தி மாறி போச்சு

# 'பார்' வாசலில் போதையில் விழுந்த இளம்பெண்

**சமூக வலைதளங்களில் வீடியோ வைரல்**

**புதுச்சேரி, ஜன. 28–**

புதுச்சேரியில் போதை தலைக்கேறிய இளம் பெண் ஒருவர் நிதானம் இல்லாமல் 'பார்' வாசலில் விழுந்து புரள்வதும், அவருடைய ஆண் நண்பர் நீண்ட போராட்டத்திற்கு பிறகு அங்கிருந்தவர்கள் உதவியுடன் ஆட்டோவில் ஏற்றிச் செல்லும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

புதுச்சேரி நகர பகுதியில் திரும்பிய பக்கமெல்லாம், விதவிதமான 500க்கும் மேற்பட்ட மதுக்கடைகள், மது அருந்தும் வசதியுள்ள பார்கள் உள்ளன. தற்போது ரெஸ்டாரண்டுகளில் மது அருந்தும் வசதி கொண்ட ரெஸ்டோ பாராக மாற்றப்பட்டுள்ளது. கீழ்தளத்தில் ரெஸ்டாரண்டும், மேல்தளத்தில் பார் இயங்குகிறது. அத்துடன் இங்கு இரவு நேர பார்ட்டியில் அதிக சத்தத்துடன் இசையும் ஒலிக்கிறது. குடியிருப்புகளில் இருந்த ரெஸ்டாரண்ட்டுகள் பலவும் ரெஸ்டோ பார்களாக மாற்றப்பட்டுள்ளதால் பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

ரெஸ்டோ பாருக்கு பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தொடர்ந்து கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தாலும், நகரப்பகுதிகளில் ரெஸ்டோ பார்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் வார இறுதி நாட்களில் வெளி மாநிலங்களில் இருந்து புதுச்சேரி வரும் சுற்றுலாப் பயணிகள் நள்ளிரவு வரை ரெஸ்டோ பார்களில் குடித்துவிட்டு போதையில் நகரில் உலா வருவதால், அதிக விபத்துகள் மட்டுமின்றி பல்வேறு சமூக விரோத செயல்களும் அரங்கேறி வருகின்றன. மேலும் இளம்பெண்கள் பலர் போதை தலைக்கேறி பொது இடங்களில் குத்தாட்டம் போடுவது அதிகரித்துள்ளது.

அந்த வகையில், குடியரசு தின தொடர் விடுமுறையையொட்டி தனது ஆண் நண்பருடன் புதுச்சேரிக்கு வந்த இளம்பெண் ஒருவர் செட்டித்தெருவில் உள்ள ரெஸ்டோ பாரில் மது அருந்தி, கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளார். கொண்டாட்டத்தை முடித்துவிட்டு அந்த இளம் ஜோடி ரெஸ்டோ பாரைவிட்டு வெளியே வருகின்றனர். அப்போது அந்த இளம்பெண் உச்சகட்ட போதையில், நிதானம் இல்லாமல் ரெஸ்டோ பார் வெளியே உருண்டு புரள்கிறார். அப்போது அவருடன் வந்த ஆண் நண்பர் அந்த இளம்பெண்ணை அழைத்து செல்ல நீண்ட நேரமாக முயற்சி செய்கிறார். முடியாத நிலையில் தரையில் மயங்கி கிடக்கிறார். ஒருகட்டத்தில் அங்கிருந்தவர்கள் உதவியுடன் அந்த பெண்ணை அவர் ஆட்டோவில் ஏற்றிச் செல்கிறார். இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த வீடியோவை சமூக வலைதளத்தில் பதிவிட்டு ஒரு பண்பாடு இல்லாவிட்டால் பாரதம் இல்லை என்ற பாடலுடன் வீடியோ வைரலாகி வருகிறது.

# ஈரானில் 9 பாகிஸ்தான் தொழிலாளர்கள் சுட்டுக் கொலை

**டெஹ்ரான், ஜன. 28–**

ஈரானில் மர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில் 9 பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் தூதர் தெரிவித்துள்ளார்.



ஈரான் – பாகிஸ்தானுக்கு இடையே சமீப நாட்களாக மோதல்கள் நீடித்து வரும் நிலையில், ஈரானுக்கான பாகிஸ்தான் தூதர் முகமது முடாசிர் திப்பு அளித்த பேட்டியில், 'ஈரானின் தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள பலுசெஸ்தான் மாகாணத்தின் சரவானில் கார் பழுது பார்க்கும் நிறுவனத்தில் பாகிஸ்தான் தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் 9 பேரை துப்பாக்கி ஏந்திய மூன்று மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். மூன்று பேர் காயமடைந்தனர். பின்னர் சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடி விட்டனர். இச்சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி உள்ளோம். ஈரான் அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளோம். இச்சம்பவம் மிகவும் பயங்கரமான மற்றும் வெறுக்கத்தக்க சம்பவமாகும். இந்த சம்பவத்தை உடனடியாக விசாரித்து, இந்த கொடூரமான குற்றத்தில் ஈடுபட்டவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும்' என்றார். ஈரானில் 9 பாகிஸ்தான் தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.


**சன் டிவி நெட்வொர்க் லிமிடெட்**

CIN: L2110TN1985PLC012491

பதிவு அலுவலகம்: முரசொலி மாறன் டவர்ஸ், 73, எம்ஆர்சி நகர் பிரதான சாலை, எம்ஆர்சி நகர், சென்னை–600028

தொலைபேசி: +91–44–4467 6767 பேக்ஸ்: 91+44–4067 6161

மின்னஞ்சல்: tvinfo@sunnetwork.in இணையதளம்: www.suntv.in

**பங்குதாரர்களுக்கு அறிவிப்பு**

**கல்வி & பாதுகாப்பு நிதிக்கு (IEPF) நிறுவனத்தின் முதலீட்டு பங்குகளை மாற்றுதல்**

நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") பிரிவு 124 இன் படி IEPF (கணக்கியல். தணிக்கை. இடமாற்றம் மற்றும் பணத்தைத் திரும்பப்பெறுதல்) விதிகள், 2016 ("விதிமுறைகள்") ஆகியவற்றுடன் அவ்வப்போது திருத்தப்பட்டு, சட்டம் மற்றும் விதிகளின்படி ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல், IEPFக்கு ஈக்விட்டி பங்குகளின் கட்டாய பரிமாற்றம், ஈவுத்தொகை உரிமை கோரப்படாமலும், செலுத்தப்படாமலும் உள்ளவற்றுக்கு நிபந்தனை அளிக்கிறது.

மேற்கூறிய தேவைகளுக்கு இணங்க, அத்தகைய பங்குகளை மாற்றுவதற்கான கடைசி தேதி ஏப்ரல் 23, 2024 ஆகும். மேற்கூறப்பட்ட விதிகளைப் பின்பற்றி, பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் (RTA) அதாவது Kfin டெக்னாலஜிஸ் லிமிடெட், பங்குகளை வைத்திருக்கும் அந்த பங்குதாரர்களுக்கு குறிப்பிட்ட தகவலை IEPFக்கு மாற்றுவதற்காக ஏற்கெனவே அனுப்பியுள்ளது. அத்தகைய பங்குதாரர்களின் விவரங்களை நிறுவனம் அதன் இணையதளமான www.suntv.in இல் பதிவேற்றியுள்ளது.

2016–17 நிதியாண்டு முதல் டிவிடெண்ட் உரிமை கோரப்படாத மற்றும் டிவிடெண்ட் தொகை பெறப்படாத பங்குகளை ஏப்ரல் 23,2024 க்குள் டிவிடெண்ட் உரிமை கோரப்பட்டு / டிவிடெண்ட் தொகையை பெற இந்த அறிவிப்பு மூலம் பங்குதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இதன் மூலம் டிவிடெண்ட் உரிமை கோரப்படாத மற்றும் டிவிடெண்ட் தொகை பெறப்படாத பங்குகளை IEPF க்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை தவிர்க்கலாம். மேலே குறிப்பிட்ட ஏப்ரல் 23, 2024 க்குள் அவ்வாறு செய்யத் தவறினால், அந்த பங்குதாரர்களின் பங்குகளை IEPF க்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை நிறுவனம் மேற்கொள்ளும்.

IEPFக்கு ஈவுத்தொகை மற்றும் பங்குகளை மாற்றும்போது, விதிகளின்படி IEPF–5 படிவத்தில் IEPF ஆணையத்திற்கு விண்ணப்பம் செய்வதன் மூலம் பங்குதாரர்கள் அவற்றை கோரலாம், மேற்கூறப்பட்ட படிவம் IEPF இன் www.iepf.gov.in இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

மேற்கூறப்பட்டவை தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருந்தால் பங்குதாரர்கள், நிறுவனத்தின் பங்கு பரிமாற்ற முகவர்களை கீழே குறிப்பிட்ட முகவரியில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Kfin டெக்னாலஜிஸ் லிமிடெட், அலகு: சன் டி.வி. நெட்வொர்க் லிமிடெட், செலெனியம் டவர்–B, மனை எண்.32–31 காச்சிபவ்லி, வருவாய் மாவட்டம், நானாகிரம்குடா, ஹைதராபாத் 500 032, கட்டணமில்லா தொலைபேசி எண். 1800–309–4001, மின்னஞ்சல்: einward.ris@kfintech.com

**சன் டி.வி. நெட்வொர்க் லிமிடெடுக்காக**

இடம்: சென்னை — R ரவி

நாள்: ஜனவரி 25, 2024 — நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி


ஜனவரி 28, 2024 ஞாயிற்றுக்கிழமை

## பெரும் வளர்ச்சி

இந்தியர்களில் ஆண்டுக்கு ரூ.8.3 லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டும் எண்ணிக்கை 2027-ம் ஆண்டுக்குள் 10 கோடியாக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியர்களின் வருமானம், நுகர்வுத் திறன், சொத்து உள்ளிட்டவை தொடர்பாக ஆய்வு செய்து வெளியிடப்பட்ட அறிக்கையில், 'உலகின் 5-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உள்ளது. வரும் 2027-ம் ஆண்டுக்குள் 3-வது இடத்துக்கு முன்னேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், இந்திய மக்களின் வருவாய் அடுத்த 3 ஆண்டுகளில் கணிசமாக அதிகரிக்கும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 'ஆண்டுக்கு ரூ.8.3 லட்சம் வருவாய் ஈட்டும் இந்தியர்களின் எண்ணிக்கை 2015-ம் ஆண்டு 2.4 கோடியாக இருந்தது. தற்போது அது 6 கோடியாக உயர்ந்துள்ளது. 2027-ம் ஆண்டில் அது 10 கோடியாக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, உணவு, ஆடை, ஆபரணங்கள் உள்ளிட்ட துறைகள் பெரும் வளர்ச்சி காணும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் தங்கம், ரியல் எஸ்டேட் தவிர்த்து பங்குச் சந்தையில் நேரடியாக முதலீடு செய்வது கடந்த 5 ஆண்டுகளில் பெரும் அளவில் அதிகரித்துள்ளது. அதேசமயம், மேல்வர்க்கத்தினருக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் இடையில் செலவு செய்யும் திறனில் இன்னமும் பெரும் ஏற்றத்தாழ்வு நிலவுகிறது' என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நாட்டில் மிக வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தும் யுபிஐ முறையில் 2023ம் ஆண்டு ஆகஸ்டில் பரிவர்த்தனை 10 பில்லியன் என்ற மைல்கல்லை கடந்து சாதனை படைத்தது. ஒரு மாதத்துக்கு 100 பில்லியன் யுபிஐ பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் திறன் இந்தியாவுக்கு இருப்பதாக என்பிசிஐ உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து கூகுள் பே மூலம் யுபிஐ முறையில் உலக நாடுகளில் இந்தியர்கள் பணம் செலுத்தும் அம்சம் விரைவில் அறிமுகமாகும் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

வெளிநாடுகளில் யுபிஐ பேமென்ட் மேற்கொள்ளும் வசதி, உலக நாடுகளில் யுபிஐ பேமென்ட் முறையை கட்டமைப்பது, உலக நாடுகளுக்கு இடையே பணம் அனுப்பும் நடைமுறையை எளிதாக்குவது என மூன்று முக்கிய நோக்கத்தை முன்வைத்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. முக்கியமாக இந்தியர்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் போது வெளிநாட்டு கரன்சி மற்றும் கிரெடிட் கார்டு அல்லது பாரக்ஸ் கார்டுகளை சார்ந்து இருக்க வேண்டிய சூழல் இருக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பணம் செலுத்துவதை எளிமையாக்கவும், பாதுகாப்பாக்கவும், பயனர்களுக்கு வசதியான முறையிலும் மேற்கொள்ளும் மற்றொரு நிலையாகவும் அமையும்.

இந்நிலையில், ரிசர்வ் வங்கியானது ஜப்பான் நிறுவனத்துடன் இணைந்து தற்போது நாடு முழுவதும் யுபிஐ ஏடிஎம்களை திறக்க உள்ளது. அதில், அவரவர் வங்கிக் கணக்கிலிருந்து கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் பணத்தை எடுக்கலாம்.

இந்தியாவில் தினந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பில் யுபிஐ பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யுபிஐ மூலம் தனிநபர் தனது வங்கிக் கணக்கில் இருந்து அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு ரூ.1 லட்சம் வரை அனுப்பலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



ஆலந்தூர் ஆஷர்கானா சந்திப்பில் சுரங்க பாலம் அருகே உள்ள அண்ணா சிலை பூங்கா சீரமைக்கும் பணி நடந்து வருகிறது.

# மனைவி இறந்த அதிர்ச்சியில் கணவர் மாரடைப்பால் சாவு

## சாவிலும் இணை பிரியாத தம்பதி

**ஆத்தூர், ஜன.28–**


ஆத்தூர் அருகே மனைவி இறந்த அதிர்ச்சியில் கணவர் மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் மாவட்டம் ஆத்தூர் கோட்டை சிவன் கோயில் தெருவை சேர்ந்தவர் மாணிக்கம் (82). இவர் அங்குள்ள கோயிலில் பூசாரியாக பணி செய்து வந்தார். இவரது மனைவி ராஜம்மாள் (78). இவர்களுக்கு 3 மகன்கள், 2 மகள்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் திருமணமாகி பேரன், பேத்தியுடன் வசித்து வந்தனர். இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளாக ராஜம்மாள் உடல் நலக்குறைவு காரணமாக குடும்பத்தாரை விட்டு தனியாக அதே பகுதியில் வசித்து வந்தார். நேற்று முன்தினம் உடல் நலக்குறைவால் ராஜம்மாள் உயிரிழந்தார்.

இந்த தகவலை அறிந்த மாணிக்கம் அதிர்ச்சியில் மயங்கி விழுந்தார். அவரை அருகில் இருந்தவர்கள் உடனே மீட்டு, அருகில் இருந்த தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு மாணிக்கத்தை பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் மாரடைப்பு ஏற்பட்டு இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதையடுத்து உறவினர்கள், சாவிலும் இணை பிரியாத தம்பதியின் உடல்களை ஒரு சேர தகனம் செய்தனர். இச்சம்பவம், அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



மாணிக்கம்–ராஜம்மாள்.



Printed and published by **R.M.R. Ramesh** on behalf of Kal Publications Private Limited and printed at Dinakaran Press, (Owned by Kal Publications Pvt. Ltd.,), Plot No.170. No.10, First Main Road, Nehru Nagar, Perungudi, Chennai - 600 096 and Published at 229, Kutchery Road, Mylapore, Chennai - 600 004. Ph.4220 9191. Fax: 4220 9200/01 Editor: **R.M.R. Ramesh**. RNI Regn. No. 24428/1973